<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 240/2016

இன்று 2025 ம் ஆண்டு பிப்ரவரி புதன் 05 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜு | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 05-02-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் 2 அயிட்டங்களாக கிரையம் வாங்கினேன் என்றால், ஒரு கிரையம் தான் வாங்கினேன். 78 சென்ட் கிரையம் வாங்கினேன். அதில் 68 சென்ட் ஒரு அயிட்டமாகவும், 10 சென்ட் ஒரு அயிட்டமாகவும், கிரையம் வாங்கி இருக்கிறேன். 68 சென்ட்க்கு செக்குபந்தியாக மயில்சாமி, பழனிசாமி பூமிக்கும் வடக்கு, கண்ணம்மாள் நிறுத்திக்கொண்ட பூமிக்கும் தெற்கும் கிழக்கும், பழனிசாமி பூமிக்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) 10 சென்ட் பூமிக்கு செக்குபந்தியாக நான் கிரையம் பெறும் பூமிக்கு வடக்கு, மெயின்ரோட்டிற்கும் தெற்கு, கண்ணம்மாள் விட்டுள்ள 20 அடி வண்டித்தடத்திற்கும் கிழக்கு, கண்ணம்மாள் பூமிக்கும் மேற்கு, என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மெயின்ரோடு என்பது கிழமேல் உடுமலை செல்லும் ரிங்ரோடு ஆகும்.

3) மெயின்ரோட்டிற்கு நேர்தென்புறத்தில் தான் 10 சென்ட் வாங்கி இருக்கிறேன். 10 சென்டை ஒட்டி தென்புறத்தில் 68 சென்ட் இருக்கிறது என்றால் சரிதான். மெயின்ரோட்டிலிருந்து 10 சென்ட் பூமி வழியாக 68 சென்ட் பூமிக்கு வரலாம் என்றால் சரிதான். வழி எதுவும் குறிப்பிட்டு இல்லை. 68, 10 சென்ட் இரண்டு பூமிகளும் தற்போது வரை என்னிடம் தான் ஒரே பூமியாக இருக்கிறது என்றால் சரிதான். 68 சென்ட் பூமிக்கு தடமானது மேல்கோட்டில் தென்வடலாக உள்ளதாக தான் நான் குறிப்பிடுகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் உள்ளவாறு தான் பூமியின் அமைப்பு இருக்கிறது என்றால் சரிதான். **மாதிரி வரைபடம் பி.வா.சா.ஆ.1 ஆகும்.**

4) பி.வா.சா.1 வரைபடத்தின்படி பிரதிவாதிகள் தங்களுடைய இடம் என்று சொல்லும் இடத்திற்கும், நான் தடம் என்று சொல்லும் இடத்திற்கும், தொட்டால்போல் தென்புறத்தில் தான் 68 சென்ட் பூமி இருக்கிறது என்றால் சரிதான். கண்ணம்மாள் வகையறாவிடம் தான் நான் கிரையம் வாங்கி இருக்கிறேன் என்றால் சரிதான். கிரைய ஆவணத்தில் கண்ணம்மாள் நிறுத்திக்கொண்ட இடத்திற்கு தெற்கும், கிழக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கண்ணம்மாள் நிறுத்திக்கொண்ட இடம் என்பதை நான் ஒத்துக்கொண்டு தான் கிரையம் வாங்கி இருக்கிறேன் என்றாலும் தடமாக இல்லை என்றாலும் சரியல்ல.

5) மொத்தபூமி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், தடபாத்தியம் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மாமூல் வழித்தடம் அல்லது 20 அடி வண்டித்தட பாத்தியம் என்றும் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு தடபாத்தியம் எழுதப்படாததாலும், என்னுடைய 10 சென்ட் பூமி மெயின் ரோட்டை ஒட்டி இருப்பதாலும் நான் தனியாக தடபாத்தியம் எதுவும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

6) ஒரே கிரைய ஆவணத்தில், 10, 68 சென்ட் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதால், 10 சென்ட் பூமி வழியாக நான் சென்று கொள்ளலாம் என்பதால் தான் தனியாக தடபாத்தியம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 68 சென்ட் பூமிக்கு தான் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் சரிதான். 10 சென்ட் பூமி வழியாக நான் சென்று கொள்ளலாம் என்ற விபரம் தெரிந்துவிடும் என்பதால் தான் நான் வழக்கில் 68 சென்ட் பூமியை மட்டும் காட்டி இருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விவரத்தில் கண்ணம்மாள் நிறுத்திக்கொண்டதும், தற்போது வேலுசாமி, ராஜுக்கு பாத்தியப்பட்ட 20 அடி அகல தடத்திற்கும் தெற்கு என்று என்னுடைய கிரையப்பத்திரத்திற்கு முரணாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி பாதை உரிமை கொண்டாட கூடாது என்பதற்காக ஆவணத்திற்கு முரணாக தவறாக செக்குபந்தி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) அதேபோல் மேற்புற செக்குபந்தியும், ஆவணத்திற்கு முரணாக வழக்கிற்காக வேண்டி பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 20 அடி அகல தடம் எனக்கு அவசியம் இல்லை என்றாலும், நான் மெயின்ரோட்டிலிருந்து சென்று வருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் பெற்ற 68 சென்ட் தொடர்பாக பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை இல்லை என்றாலும், தடத்திற்கு சொத்து விவரத்தை தவறாக குறிப்பிட்டுள்ளது ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல. செக்குபந்தி தவறானது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.02.05 17:35:32 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.